# புதிய இதயம்!

(ஞாயிறு சிந்தனைகளும் புனிதர்களும்)

**2015 புரட்டாதி**

**வெளியீடு:**

மறைக்கல்வி நிலையம்

யாழ்ப்பாணம்.

## புரட்டாதி 06 பொதுக்கால 23ம் ஞாயிறு

**எசாயா 35:4-7 யாக்கோபு 2:1-5 மாற்கு 7:31-37.**

வலிமை, சக்தி, ஆற்றல், திறன் போன்ற சொற்கள் மனித வாழ்வில், விளக்கின் திரிகளைப் போல உந்துதல் வழிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளின் ஆதாரம், அடித்தளம் எங்குள் ளது? அது மனித பார்வையை அல்லது இறைபார்வையை ஆதாரமாகக் கொண்டதா? இன்றைய வாசகங்கள் பதில் அளிப்பவையாக அமைந் துள்ளன.

இறைவாக்கினர் எசாயாவின் காலம், மக்கள் தமது சொந்த மண் இழந்து வேற்றுநாட்டில் உழன்றபொழுது, கடவுள் ஒருவரையே தமது மீட்ப ராகக் கொண்ட இஸ்ராயேல் மக்கள், "கடவுள் எங்கே? அவர் மாயமாய் மறைந்துவிட்டாரோ?" என்று கேள்வி எழுப்பினார்கள். அவர்களுக்கு ஆணித்தரமாக எசாயா பதில் கொடுக்கின்றார். "அஞ்சாதிருங்கள். இதோ உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார். அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்"(எசாயா 35:4) என்று கூறி அவர் கடவு ளது இருப்பை உறுதிப்படுத்துகின்றார்.

யாக்கோபு எளிய நடையில் சமூக முரண்பாடுகளை முன் வைக்கின்றார். பொன்மோதிரமும் பளபளப்பான ஆடையும் அணிந்த ஒரு வரும் அழுக்குக் கந்தையணிந்த ஏழை ஒருவரும் உங்கள் தொழு கைக்கூடத்தினுள் வருகிறார்கள் என வைத்துக்கொள்வோம். அப் பொழுது நீங்கள் பளபளப்பான ஆடையணிந்தவர்மீது தனிக்கவனம் செலுத்தி அவரைப் பார்த்து, "தயவுசெய்து இங்கே அமருங்கள்" என்று சொல்கிறீர்கள். ஏழையிடமோ, "அங்கே நில்" என்றோ அல்லது "என் கால் பக்கம் தரையில் உட்கார்" என்றோ சொல்கிறீர்கள் (யாக்.2:2-4).

"ஆளுக்கொரு நீதி கடவுளிடமில்லை" (உரோ. 1:11) என்ற பவுலடிகளாரின் கொள்கை யாக்கோபின் எழுத்துக்களில் இலகுத் தன்மை பெறுகின்றது. நல்லாட்சி என்பது வரண்ட தத்துவங்களுக்குள், மாற்றமுடியாதென்ற சிந்தனைப்போக்குகளுள் சிறைபிடிக்கப்பட்டுள்ள தல்ல.

மேற்படி இரு வாசகங்களும் நிறைவேறும் அத்தாட்சியாக மிளிர் வது இயேசு ஆண்டவரின் கருணைமிகு செய்கையாகும். இயேசு விண்

ணோக்கிக் கண்களை உயர்த்தி, தனது கருணையின் வாழ்வினுக்குச் சான்றுபகர்கின்றார். இன்றைய நற்செய்தி வாசகத்தில் காது கேளாத வனும் திக்குவாயனுமாகிய அவன் இயேசுவினால் குணம்பெற்றதும் இயேசு புகழ் பாடி, இயேசுவின் நற்செய்தியைத் துணிச்சலோடு ஊரெங்கும் பறை சாற்றினான்.

## புரட்டாதி 13 பொதுக்கால 24ம் ஞாயிறு

**எசாயா 50:5-9 யாக்கோபு 2:14-18 மாற்கு 8:27-35.**

"ரோசாப்பூக்களில் முட்கள் உள்ளனவே என்று சிலர் முணுமுணுப்பார்கள். ஆனால் முட்கள் ரோசாப்பூக்களைக் கொண்டுள்ளன என நான் நன்றியாயுள்ளேன்" என்று அல்போன்ஸ் கார் மொழிந்தார். "நீ இவ்வுலகை விட்டு நீங்கும்போது எதையும் நீ பெற்று எதையும் எடுத்துச் செல்ல இயலாது, நீ கொடுத்ததைத் தவிர" என்று பிரான்சிஸ் அசிசியார் பேசினார்.

"தீர்ப்பிடும் நாளில் நாம் பெற்ற பட்டங்கள் பதவிகள் போன்றவற்றால் தீர்ப்பிடப்படமாட்டோம். மாறாக, 'நான் பசியாய் இருந்தேன். எனக்கு உணவு அளித்தீர். நான் உடையின்றி வாடினேன். உடை அணிவித்தீர். வீடின்றி அலைந்தேன். என்னை உம்மிடம் அழைத்துச் சென்றீர்' எனும் நற்செயல்களால் மட்டுமே நாம் தீர்ப்பிடப்படுவோம்" - அன்னை தெரேசா.

எசாயா 'துன்புறும் ஊழியனின்' பண்புகளை, தளரா நம்பிக்கையை எடுத்துரைக்கின்றார். "எனக்கு ஆண்டவர் துணை! என்னில் குற்றம் காண்பவன் யார்?"(எசாயா 550:9). இதைச் சொல்ல மாசற்ற வாழ்வு இமயம் போலிருக்கவேண்டும். இங்கு முக்கிய கேள்வி. விசுவாசமா? நற்செயலா? இவை பிரிக்கப்படமுடியுமா? இவை நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.எனக்கு யார் இயேசு? மற்றவர் சொல்வது இருக்கட்டும். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார்:

"இயேசுவை அனுபவியுங்கள். அருட்சகோதரர்கள் இயேசுவை அனுபவிக்க இயலாதுபோனால் குருப்பட்டம் பெறுவதை ஒத்திவையுங்கள். இயேசுவை அனுபவிக்கும் இளம் உள்ளங்களே இன்று எமக்குத் தேவை."

ஞா. எட்மன்ட் மைக்கல், அ.ம.தி.

## புரட்டாதி 20 பொதுக்கால 25ம் ஞாயிறு

**சாஞா 2:12, 17-20 யாக்கோபு 3:16-4:3 மாற்கு 9:30-37.**

இயேசுவின் சீடர்களிடையே போட்டி மனப்பான்மை நிலவியதை அறிந்த இயேசு அவர்கள் இந்த எதிர்மறை மனோபாங்கிலிருந்து விடுபடவேண்டும் என்று விரும்பினார். மற்றவர்களின் வளர்ச்சியில் மகிழ்ச்சியடையாத மக்கள் மற்றவர்களின் அழுகையிலே இன்பம் காணமுனைவர். 'இன்னொருவர் வேதனை இவர்களுக்கு வேடிக்கை, இதயமற்ற மனிதருக்கு இது என்றும் வாடிக்கை' என்று கவிஞன் பாடியது இவர்களுக்குப் பொருந்தும். போட்டி மனப்பான்மை தொடர்பாக இரு விளைவுகளை நாம் அவதானிக்கலாம். அவையாவன:

**அ. போட்டி மனப்பான்மை பொறாமைக்கு வித்திடுகின்றது.**

போட்டி மனப்பான்மை கொண்டவர்கள் ஒருவர்மீது ஒருவர் பொறாமை கொண்டு மற்றவர்களை அழிக்க முற்படுவர். "உங்கள் உள்ளத்தில் பொறாமையும் மனக்கசப்பும் இருக்குமானால் அதைப்பற்றிப் பெருமை பாராட்டவேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேச வேண்டாம். இத்தகைய ஞானம் மண்ணுலகைச் சார்ந்தது. பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுங்செயல்களும் நடக்கும்" (யாக்கோபு 3:14-16). நீதிமொழிகள் நூல் சினம், சீற்றத்தை விடப் பொறாமையைக் கொடியதாகச் சுட்டுகின்றது (நீமொ 27:4). நுகர்வுக் கலாச்சாரத்தின் அடிப்படை போட்டி மனப்பான்மைதான். தொழில்நுட்பம், கணணி, விளம்பரம், விளையாட்டு என்று எத்துறையை எடுத்தாலும் அங்கு போட்டிதான் நிலவுகின்றது.

**ஆ. போட்டி மனப்பான்மை மனித ஆளுமையைச் சீரழிக்கின்றது.**

2குறி 26:1-20 பகுதியில் யூதாவின் அரசனான உசியா தன் எதிரிகளை எல்லாம் அழித்து வெற்றிபெறுகின்றான். வெற்றி தலைக்கு ஏறியதால் தலை, கால் தெரியாத அளவிற்குத் தற்பெருமை கொள்கின்றான். ஆணவத்தோடு குருக்கள் செய்யும் தூபம் காட்டும் பணியைத் தானே செய்ய முயற்சி எடுக்கின்றான். இறுதியில் கடவுளால் தண்டிக்கப்படுகின்றான். மனித ஆளுமைச் சீரழிவிற்குப் போட்டி மனப்பான்மை அடிப்படைக் காரணியாக அமைகின்றது. போட்டி மனப்பான்மை,

பொறாமை போன்வை எதிர்மறைத் தாக்கத்தை ஆளுமையில் தோற்று வித்து மனித ஆளுமையை நலிவுறச் செய்கின்றன.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் சீடர்களிடையே முரண்பாடு ஏற்பட்டதை வாசிக்கக் கேட்டோம். தங்களுள் யார் பெரியவன் என ஒரு வரோடு ஒருவர் வாதாடினார்கள். அவர்களுக்கு இயேசு பதில்மொழியாக, "ஒருவர் முதல்வராக இருக்கவிரும்பினால் அவர் அனைவரிலும் கடைசி யானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்!" என்று எடுத்தியம்பினார். தாழ்மையுள்ளம் கொண்டவர்கள், மற்றவர்களின் வளர்ச்சிக்காகத் தம்மையே மெழுகாக உருக்குபவர்கள் தரணியில் முதலிடம்பெறுவர் என்பது இயேசுவின் எதிர்வுகூறலாகும்.

ஒரு கதை. ஒருமுறை இரு தபசிகள் குளத்தின் இரு எதிர்கரை களிலிருந்து தியானம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் முன்னால் கடவுள் தோன்றி, "இருவரம் கேள். நான் உடன்தருகின்றேன்" என்றார். உடனே தபசி, "1வது, எனக்கு நேரே இருந்து தியானம் செய்பவனுக்கு நான் இரண்டாவது கேட்பதில் இரு மடங்கு கொடுக்குமாறு கேட்கின்றேன். 2வது, எனது ஒரு கண் குருடாகுமாறு கேட்கின்றேன்." "ஆகட்டும்!" என்று கூறியவாறு கடவுள் மற்றவரிடம் பேச்சுத் தொடுத் தார். அவனும் முதலாவது தபசி கூறியவாறே இரு வரங்கள் கேட் டான். ஈற்றில் இருவரும் இரு கண்கள் குருடாகினர். பிறர் சார்பாக அழிவை நாடுபவன் ஈற்றில் தன்னையே அழித்துக்கொள்கின்றான். பிற ரது வளர்ச்சியில் ஆர்வத்தோடு நடைபயில்பவன் தனது வளர்ச்சியினை உறுதிப்படுத்திக் கொள்கின்றான்.

## புரட்டாதி 27 பொதுக்கால 26ம் ஞாயிறு

**எண்ணாகமம் 11:25-29 யாகப்பர் 5:1-6 மாற்கு 9:38-43, 45, 47-48.**

குறுகிய மனப்பான்மையை உடைத்தெறிவது இன்றைய காலத் தின் தேவையாகும். அகன்ற நோக்கோடு, விரிந்த பார்வையோடு வாழ் வினை எதிர்கொள்ளல் என்பது இன்றைய நாளுக்கான சவாலாகும். இத் தகைய குறுகிய மனப்பான்மையை முதல் வாசகத்தில் யோசுவாவிட மும் நற்செய்திவாசகத்தில் யோவானிடமும் காணுகின்றோம். ஆனால் இருவரிடமும் நிலவிய குறுகிய மனப்பான்மையினை மோசேயும் இயேசு

வும் களைய முற்படுகின்றார்கள். இறைவனின் செயற்பாடுகளுக்கு எல்லை வகுக்கமுடியாது என்பதையும் நல்லவை எங்கு காணப்பட்டாலும் அவற்றை ஊக்கவிக்கவேண்டும் என்பதையும் இருவரும் எடுத்தியம்பு கின்றார்கள்.

ஒரு காலத்தில் திருச்சபையிலும் இத்தகைய குறுகிய மனப் பான்மை பரவலாகக் காணப்பட்டது. 'திருச்சபைக்கு வெளியே இரட்சிப்பு இல்லை' என வலிந்து பேசப்பட்டது. எனினும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் திருச்சபையின் கருத்தியலில் மறு மலர்ச்சி ஏற்பட்டது. குறுகலான் கண்ணோட்டங்கள் கைவிடப்பட்டன. பிற மதங் களிலும் இறைவனின் செயற்பாடு இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், இறை அரசை நிலைநாட்டுவதற்கான நீதிக்கான போராட்டத்தில் நாம் மற்றவர்களோடு இணைந்து செயற்படுவது அவசியமாகின்றது. உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இறை அர சின் விழுமியங்களுக்கு மீள் உருவாக்கம் கொடுக்கும்போது நல் லாட்சி உதயமாகின்றது, குடும்ப மட்டத்தில், கிராமிய மட்டத்தில், சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இறை அரசிற்கான விழுமியங் களை உள்வாங்கவேண்டும். "நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக் கிறார்" (மார்க்கு 9:40)என்ற இயேசுவின் பேச்சு நமக்கு எதிராக இல்லாத வர்களை நம்பால் ஈர்த்துக்கொண்டு செயற்படுவதற்கான அழைப்பாக இருக் கின்றது.

கூட்டுமுயற்சி அதிக பலனைத் தரும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகாயத்தில் பறவைகள் அவ்வப்போது கூட் டாக V வடிவத்தில் பறப்பதைப் பார்த்திருக்கிறோம். 'அவை ஏன் அவ் வாறு பறக்கின்றன?' என்ற கேள்விக்குத் தற்பொழுது காரணம் அறி வியல்ரீதியாகக் கிடைத்துள்ளது. அதாவது, முதல் பறவை சிறகை அடித்துப் பறக்கும்போது காற்றில் ஏற்படும் வெற்றிடம் அடுத்துப் பறக்கும் பறவைக்குச் சாதகமாக அமைகின்றது. இதன் காரணமாக, அடுத்தடுத்துப் பறக்கும் பறவைகள் தங்களது முழுச் சக்தியையும் பயன் படுத்திப் பறக்காமல் வழக்கமாகப் பயன்படுத்தும் ஆற்றலில் பாதியை மட்டும் பயன்படுத்திப் பறக்கின்றன. மேலும் பின்புறம் பறக்கும் பறவைகள் எழுப்பும் ஒலி முன்புறம் பறக்கும் பறவைகளுக்கு உற்சாகத்தைத் தரு கின்றது. அத்தோடு களைப்பின் காரணமாக அல்லது இதர காரணமாக

ஒரு பறவை கூட்டத்தை விட்டு விலகி கீழ்நோக்கி இறங்கியது என்றால் கூடவே இரு பறவைகளும் வந்து அப்பறவைக்கு உதவிசெய்கின்றன. இவ்வாறே மனிதராகிய நாமும் கூட்டு முயற்சியில் ஈடுபடும்பொழுது அளவுக்கு அதிகமான பயனைப் பெறுகின்றோம்.

நமது பங்குத் தளங்களிலும் கூட்டுமுயற்சியை முன்னெனுப்பதன் மூலமாக இறை அரசினைப் புதிய பாணியில் கட்டி எழுப்பமுடிகின்றது, அனைவரையும் அரவணைத்து புது வாழ்வு நல்கும் இறைசமூகம் நம் மத்தியில் மலர ஆவனசெய்வோம்.

## புரட்டாதி 5 அருளாளர் அன்னை தெரேசா (1910-1997)

அன்னை தெரேசா 1910 ஆவணி மாதம் 26ம் திகதி மசடோனியாவில் பிறந்தவர். இவர் 1928ல் லொறெற்றோ சகோதரிகள் துறவசபையில் இணைந்துகொண்டார். 1948ல் தனது சொந்த நாட்டைவிட்டு, இந்தியாவிலுள்ள கல்கத்தாவிற்கு வந்து அரும் பணியாற்றினார். சமாதானத்திற்கான நோபல் பரிசு 1979ல் அன்னை தெரேசாவிற்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் சிறந்த விருதான 'பாரத ரத்னா' விருதை 1980ல் அன்னை திரேசா பெற்றார். "எங்கு அன்பு உண்டோ அங்கே கடவுள் இருக்கிறார்" என்ற வார்த்தைகள் அடிக்கடி அன்னையின் வாழ்வில் எழும் வார்த்தைகளாகும். ஏழைகளின் இன்ப துன்பங்களில் பரிவன்போடு பங்கெடுப்பது அன்னையின் இயல்பான பணியாகும்.

இருபது வருடங்கள் லொறெற்றோ சபைத் துறவியாக வாழ்ந்த அன்னை தெரேசா புகையிரதம்மூலம் ஞானவொடுக்கத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில் 'அழைப்பிற்குள் அழைப்பு' ஒன்றைப் பெற்றதாக, அவர் தனது புது வாழ்விற்கான அழைப்பை வர்ணிக்கின்றார். அன்பை அனுபவியாதோருக்கு, ஆதரவு இல்லாதோருக்கு, தொழுநோயாளர்களுக்கு, தேடுவாரற்றுத் தெருவில் கிடப்போருக்கு, கவனிக்கப்படாதோருக்கு, கைவிடப்பட்டவர்களுக்கு, அன்பையும் ஆதரவையும் கருணையையும் கரிசனையையும் வழங்கும் ஓர் அன்புச் சகோதரியாகத் தன்னை அர்ப்பணமாக்கினார். அளப்பரிய இன்னல்களை அன்னை அனுபவிக்க நேர்ந்தாலும் அவரது பணி பன்மடங்காகப் பலனளித்தது. அன்னையின் அயரா முயற்சியினால் 1950ல் கல்கத்தாவில், பிறர் அன்பின் பணியாளர் சபை உருவெடுத்தது. நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக, ஏழை எளியோர்

களுக்கு அரும்பணியாற்றிய அன்னை தெரேசா முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் தனது சபையை ஸ்தாபித்தார். 1976ல் தியான சகோதரிகள் சபையும் 1977ல் தியான சகோதரர்கள் சபையும் 1983ல் குருக்களுக்கான சபையும் ஸ்தாபிக்கப்பட்டது. அன்னை தெரேசாவின் இறப்பின்பொழுது, 120 நாடுகளில் 3842 பிறர்ன்புச் சக-ாதரிகளும் 19 நாடுகளில் 363 சகோதரர்களும் 3 நாடுகளில் 14 தியான சகோதரர்களும் 3 நாடுகளில் 13 பிறரன்புச்சபைக் குருக்களும் காணப்பட்டார்கள்.

'ஓ! இறைவா! உமக்காகவே எம்மைப் படைத்துள்ளீர். எமது இதயங்கள் உம்மில் ஓய்வுபெறும்வரை அவை அமைதியற்றே இருக்கும்" என்று புனித அகுஸ்தீனார் மொழிந்தார். எல்லா மக்களும் உள்ளத்தின் ஆழத்தில் இறைவனை நம்புகின்றார்கள் என்பதே அன்னையின் விசுவாசப் பிரமாணமாகும். இறைவனுடனான வேட்கை எம் எல்லோர் உள்ளங்களிலும் உள்ளது. அது அன்பாக, அமைதியாக, ஆனந்தமாக எல்லோர் உள்ளங்களிலும் பரிணமிக்கின்றது.: உடலுக்கு இரத்தம் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு இறைவனோடு இணைவதற்குச் செபம் தேவைப்படுகின்றது" என்று கூறி எமது வாழ்க்கையில் செபத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றார் அன்னை திரேசா. இதய அமைதியில் இறைவன் பேசுகின்றார். மௌனத்தின் பலாபலன் செபமாகும். செபத்தின் பலாபலன் விசுவாசமாகும். விசுவாசத்தின் பலாபலன் அன்பாகும். அன்பின் பலாபலன் அமைதியாகும். புனித இஞ்ஞாசியாரின் தியானமுறைப்படி, நாளாந்தம் இறைவார்த்தையின் ஒளியில் அரைமணித்தியாலத் தியானமே அன்னை திரேசாவின் பிரதான செபமாகும். ஆன்மைய தியானத்தின் விளைவாக, இறைவனோடு நெருங்கிய உறவையும் உரையாடலையும் கொண்டுவிளங்கினார். இவர் சிறு சிறு செபங்களை அடிக்கடி சொல்லிக்கொண்டு, இறைப் பிரசன்னத்தில் மூழ்குவார். இறைவன் சார்பாக ஆழ்ந்த அறிவும் அன்பும் கொண்டு, இறையன்பிலும் பிறரன்பிலும் இணைந்து இன்பம் கண்டார்.

ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியு இவரது ஆரம்பப் பெயராகும். கோன்ஜா என்பதற்கு அல்பேனிய மொழியில் றோஜா அரும்பு என்று பொருள். இவர் ஆவணி மாதம் 26ம் திகதி பிறந்தபோதிலும் இவர் திருமுழுக்குப் பெற்ற ஆவணி மாதம் 27ம் திகதியையே தனது உண்

மையான பிறந்த நாளாகக் கருதினார். இவரே குடும்பத்தில் கடைசிப் பிள்ளை ஆவார். இவரது தந்தை அல்பேனிய அரசியலில் ஈடுபட்டிருந் தார். இவருக்கு எட்டு வயதாயிருக்கும்பொழுது இவரது தந்தை இறந்து விட்டார் அவரது மரணத்திற்குப் பின்னர் தாயார் இவரை நல்லதொரு கத்தோலிக்க விசுவாசியாக வளர்த்தார். இவர் பன்னிரெண்டு வயதில் துறவறத்தை விரும்பி, பதினெட்டுவயதில் லொறெற்றோ சபையில் இணைந்து கொண்டார். அதன்பின்னர் தாயையோ அல்லது தனது உடன்பிறந்த சகோதரியையோ மீண்டும் காணவில்லை. 1983ல் திருத் தந்தை 2ம் ஜோண் பவுலை உரோமையில் சந்தித்தபொழுது அன்னை திரேசாவிற்கு மாரடைப்பு ஏற்பட்டது. 1989ல் இரண்டாம் முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. அதற்குப் பின்னர் செயற்கை இதயமுடுக்கி பொருத்தப்பட்டது. 1991ல் மெக்சிக்கோவில் நிமோனியாவால் வருந்திய துடன் மீண்டும் இதயக்கோளாறினால் அவதிப்பட்டார். 1996 ஆவணி யில் மலேரியாவினாலும் இதயக்கோளாறினாலும் பாதிக்கப்பட்டு இதய அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டார். 1997 புரட்டாதி 5ம் திகதி தனது 87ம் வயதில், அன்னை இறைவீடு எய்தினார். திருத்தந்தை 2ம் அருளப்ப சின்னப்பர் 2003ம் ஆண்டு கல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டினார். அன்னை தெரேசா மானிட சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதற்கான நிறை வலுவை இயேசுக்கிறிஸ்துவையும் அவரது திரு இருதயத்தையும் தியானிப்பதன் மூலமாகப் பெற்றுக்கொண்டாார்.

## புரட்டாதி 08 வில்லநோவாவின் புனித தோமையார் (1488 – 1555)

ஸ்பெயின் நாட்டு அப்போஸ்தலன் என அழைக்கப்படும் புனித தோமையார் காசிலிலுள்ள புவென்லானாவில் 1488ல் பிறந்தார். இவர் பிறந்த இடத்திலிருந்து இரு மைல் தொலைவிலுள்ள வில்லநோவா பட்டினத்தில் கல்வி கற்றதின் காரணமாக, வில்லநோவாவின் புனித தோமையார் என அழைக்கப்படுகின்றார். இவரது பெற்றோர் வில்லநோவாவையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவரது பெற்றோர் வறுமையில் வாழ்ந்தாலும் சிக்கனமான வாழ்க்கைமுறையை அனுஸ்டித்து அன்றாடம் ஏழைகளுக்குத் தானதர்மம் செய்வதில் சிறந்துவிளங்கினார்கள். இவரது பெற்றோரின் தான தர்ம மனோபாங்கு இவரது ஆளுமை உருவாக்கத்தில்

பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது எனலாம். இறுதிவரை இந்நற்பண்பினில் வளர்ச்சியடைந்து பிரமாணிக்கத்தோடு வாழ்ந்தார். ஏழு வயதிலேயே ஏழைகளுக்குத் தானதர்மம் செய்வதற்காகத் தனது சாப்பாட்டின் ஒருபகுதியை ஒதுக்கிவைத்துப் பகிர்தலில் பாண்டித்தியம் பெற்றார். கடுமையான ஒறுத்தல் முயற்சி, சாந்தம், இனிமை போன்ற பண்புகளால் நிரப்பப்பட்டு எல்லோராலும் ஈர்க்கப்பட்டார். இயேசு, மரியா என்ற இரு வார்த்தைகளே இவரது பெற்றோர் சொல்லிக்கொடுத்த முதல் வார்த்தைகளாகும். இவர் சிறு வயதிலிருந்தே அன்னை மரியாமீது ஆழ்ந்த பக்திகொண்டு காணப்பட்டார்.

பதினைந்து வயதில் இவர் அல்கலா பல்கலைக் கழகத்திற்குச் சென்று முதுகலைமாணிப் பட்டம் பெற்று, மெய்யியற்றுறையில் ஈராண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர், சலமன்காவில் ஈராண்டுகள் ஒழுக்கவியற்றுறையில் கல்வி கற்பித்தார். 1518ம் ஆண்டு, இவர் புனித ஒஸ்ரினின் தபசிகள் குழுவில் இணைந்துகொண்டார். 1529ல் குருவா-கத் திருநிலைப்படுத்தப்பட்டார். இறைவார்த்தையைப் போதித்ததிலும் பாவசங்கீர்த்தனம் கேட்பதிலும் இவர் ஆர்வத்தோடு செயற்பட்டார். இவரது செயற்பாடுகளின் சிறப்பையும் வெற்றியையும் கண்டு, ஸ்பெயின் நாட்டு அப்போஸ்தலன் என அழைக்கப்பட்டார். தூய வாழ்வினை அடிப் படையாகக் கொண்டு துறவியரின் இதயங்களை இவர் வென்று பெயர் பெற்றார். இவர் செபங்களின் பின்னர் குறிப்பாகத் திருப்பலியின் பின்னர் பரவசநிலையில் இருப்பார். அப்பொழுது பார்ப்போரின் கண்களில் பளிச்சென ஒளிவீசிடும்.

இவர் மிகவும் நெருக்கமான முறையில் சபை ஒழுங்குகளை அனுஸ்டிக்குமாறு துறவிகளைப் பணித்தார். இவர் அவர்களை அடிக்கடி தரிசித்து, அவர்கள் இறைவனுக்கான ஆராதனை, பரிசுத்த வேதாகமம், ஞான நூல்கள் வாசிப்பு, தூய தியானம், அறநெறி ஒன்றிப்பு, சகோ தரத்துவ அன்புறவு, பாரபட்சமின்றிப் பணிகள் பகிரப்படல் போன்ற வற்றைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார். 1545ல் புனித தோமாஸ் ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார். அப்போது இவர் வெறும் தரை யில் முழந்தாட்படியிட்ட வண்ணம் திருச்சிலுவையை அரவணைத்து, இயேசு ஆண்டவரை ஆராதித்தார். கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக் கெடுத்தோட தரையை முத்தமிட்டார். ஆயர் இல்லத்தை மெருகூட்டுதற்

காகக் கொடுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு பொதுமருத்துவமனையைப் புதுப்பித்தார். இவரது பிரசங்கங்கள் கேட்போரின் இதயங்களில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது. விளைவாக மக்கள் இவரை இறைவாக் கினராக ஏற்றுக் கொண்டார்கள். இவர் தனது பணியாளர்கள் சார்பாக பரிவோடும் கரிசனையோடும் நடந்துகொள்வார். நாள்தோறும் ஐநூறுக்கும் அதிகமான ஏழைகள் இவரது அரண்மனைக்கு வந்து உதவிபெற்றுச் செல்வார்கள். அநாதைப் பிள்ளைகள் அனைவரும் இவரது விசேடமான கவனிப்பிற்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஏழைப் பெண்களுக்கான நிதி யத்தை உருவாக்கிப் பல பெண்களுக்குத் திருமண வாய்ப்பை வழங் கினார்.

இறப்பதற்கு முன்னராக புனித தோமாஸ் தனக்குரித்தான அனைத் தையும் ஏழைகளுக்குக் கொடுத்து, நிறை இன்பம் கண்டார். தனது கட்டிலைக்கூட சிறைக்காவலன் ஒருவனுக்குக் கையளித்தார். 1555 புரட்டாதி 8ம்திகதி, திவ்விய நற்கருணை உட்கொண்டபின்னர், “இறைவா, உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்” என்று கூறித் தனது 67ம் வயதில் இறைவீடுசேர்ந்தார். 1618ல் திருத்தந்தை 5ம் பவுல் இவருக்கு முத்திப் பேறுபெற்ற பட்டம் கொடுக்க. 1658ல் திருத்தந்தை 7ம் அலெக்ஸாண்டர் புனிதர் பட்டம் கொடுத்தார்.

## புரட்டாதி 08 கன்னி மரியாவின் பிறப்புவிழா

“ஓ மனிதா! இந்த வியப்பின் மறைபொருளில், மெய்மறந்த மகிழ்ச் சியில் உன்னை மாற்றிடு! நிகரற்ற கடவுள் தன் ஒரே மகனை மரியாவின் ஒரே மைந்தனாக வந்திட அருள்கூர்ந்தார்” என்று புனித அன்செலம் மொழிந்தார். தாயாகவும் மாசற்ற கன்னியாகவும் மரியா விளங்குகின்றார். இது மரியாவிற்கு மட்டுமே உரித்தான விசேட கொடையாகும் என்று புனித பேர்னாட் குறிப்பிடுகின்றார்.

“எல்லாப் பரிசுத்ததனங்களுக்கும் பூரணமான மாதிரியாக கன்னி மரியா விளங்குகின்றார். மரியாவின் வாழ்வும் கன்னிமையும் கற்பினதும் நற்பண்பினதும் வடிவமாய் கண்ணாடிபோல் பிரதிபலிக்கட்டும்! கடவுளின் தாயாய் விளங்கியதே மரியாவின் மாண்பாகும். இதயத்தில் தாழ்மையும் தீர்மானங்களில் விவேகமுள்ளவராய் மரியா வியங்கினார். உலக

செல்வங்கள் மேலல்ல மாறாக ஏழையரின் செபங்களின்மேல் கூடுதலான நம்பிக்கை வைத்தார். கடவுளுக்கு மாத்திரமே என எல்லாவற்றையும் கையளிப்பு செய்து வாழ்ந்தார். எவரையும் புண்படுத்தாமல் எல்லோருக்கும் நன்மைகள் செய்து வாழ்ந்தார். அவரது பார்வைகள் இனிமையாகவும் பேச்சு சாந்தமாகவும் செயற்பாடு எளிமையாகவும் இருந்தன. அவரது பிறர்சிநேகச் செயற்பாடுகள் எல்லை கடந்து காணப்பட்டன" என்று புனித அம்புறோஸ் கூறுகின்றார்.

"மரியா என்ற பெயருக்குப் பக்கத்தில் 'கன்னி' என்ற சொல்லைச் சேர்க்காமலிருக்கமுடியாது. ஏனெனில் மரியாவிற்கு வேறு பிள்ளைகளிருந்தால், சிலுவையடியில் புனித யோவானை, 'இதோ உன் மகன்' என்றும் மரியாவை 'இதோ உன் தாய்' என்றும் இயேசு கையளிப்பு செய்திருக்கமாட்டார். மரியாவின் கற்பு அற்புதமான கொடை மட்டுமல்ல, அவர் தானாகவே தேர்ந்தெடுத்த நற்பண்பாகவும் அமைகின்றது" என்று புனித எபிபேனியஸ் எடுத்தியம்பினார்.

புனித சூசையப்பர் மரியாவின் உதரத்திற்கும் மேலாக அவரது நற்பண்பையே, மனிதவியல்பிற்கும் மேலாக இறையருளையே நம்பினார். மரியாவின் இதயத் தூய்மை, அக அழகு, அகத்துள்ளிருந்து வெளிவரும் முழு மகிமை போன்றவை மரியாவின் சிறப்புப் பண்புகளாக மிளிர்ந்தன. அவரது இறைவனையே வெளிக்காட்டும் சிறிய சிறிய செயல்கள்கூட நாங்களும் நல்லவர்களாக மாறமுடியும் என்ற நம்பிக்கையையே எம்மில் தோற்றுவிக்கின்றன.

## புரட்டாதி 08 கன்னி மரியாவின் பிறப்புவிழா

"ஓ மனிதா! இந்த வியப்பின் மறைபொருளில், மெய்மறந்த மகிழ்ச்சியில் உன்னை மாற்றிடு! நிகரற்ற கடவுள் தன் ஒரே மகனை மரியாவின் ஒரே மைந்தனாக வந்திட அருள்கூர்ந்தார்" என்று புனித அன்செலம் மொழிந்தார். தாயாகவும் மாசற்ற கன்னியாகவும் மரியா விளங்குகின்றார். இது மரியாவிற்கு மட்டுமே உரித்தான விசேட கொடையாகும் என்று புனித பேர்னாட் குறிப்பிடுகின்றார்.

"எல்லாப் பரிசுத்ததனங்களுக்கும் பூரணமான மாதிரியாக கன்னி மரியா விளங்குகின்றார். மரியாவின் வாழ்வும் கன்னிமையும் கற்பினதும்

நற்பண்பினதும் வடிவமாய் கண்ணாடிபோல் பிரதிபலிக்கட்டும்! கடவுளின் தாயாய் விளங்கியதே மரியாவின் மாண்பாகும். இதயத்தில் தாழ்மையும் தீர்மானங்களில் விவேகமுள்ளவராய் மரியா வியங்கினார். உலக செல்வங்கள் மேலல்ல மாறாக ஏழையரின் செபங்களின்மேல் கூடுதலான நம்பிக்கை வைத்தார். கடவுளுக்கு மாத்திரமே என எல்லாவற்றையும் கையளிப்பு செய்து வாழ்ந்தார். எவரையும் புண்படுத்தாமல் எல்லோருக்கும் நன்மைகள் செய்து வாழ்ந்தார். அவரது பார்வைகள் இனிமையாகவும் பேச்சு சாந்தமாகவும் செயற்பாடு எளிமையாகவும் இருந்தன. அவரது பிறர்சிநேகச் செயற்பாடுகள் எல்லை கடந்து காணப்பட்டன" என்று புனித அம்புறோஸ் கூறுகின்றார்.

"மரியா என்ற பெயருக்குப் பக்கத்தில் 'கன்னி' என்ற சொல் லைச் சேர்க்காமலிருக்கமுடியாது. ஏனெனில் மரியாவிற்கு வேறு பிள்ளை களிருந்தால், சிலுவையடியில் புனித யோவானை, 'இதோ உன் மகன்' என்றும் மரியாவை 'இதோ உன் தாய்' என்றும் இயேசு கையளிப்பு செய்திருக்கமாட்டார். மரியாவின் கற்பு அற்புதமான கொடை மட்டுமல்ல, அவர் தானாகவே தேர்ந்தெடுத்த நற்பண்பாகவும் அமைகின்றது" என்று புனித எபிபேனியஸ் எடுத்தியம்பினார்.

புனித சூசையப்பர் மரியாவின் உதரத்திற்கும் மேலாக அவரது நற்பண்பையே, மனிதவியல்பிற்கும் மேலாக இறையருளையே நம்பினார். மரியாவின் இதயத் தூய்மை, அக அழகு, அகத்துள்ளிருந்து வெளிவரும் முழு மகிமை போன்றவை மரியாவின் சிறப்புப் பண்புகளாக மிளிர்ந்தன. அவரது இறைவனையே வெளிக்காட்டும் சிறிய சிறிய செயல்கள்கூட நாங்களும் நல்லவர்களாக மாறமுடியும் என்ற நம்பிக்கையையே எம்மில் தோற்றுவிக்கின்றன.

## புரட்டாதி 10
## றொலென்ரினோவின் புனித நிக்கொலாஸ் (1245 - 1306)

அன்கோனா நாட்டிலுள்ள பேர்மோவிற்கு அருகிலுள்ள சென் அன்ரனோ பட்டினத்தில் 1245ம் ஆண்டு பிறந்தார். ஏழ்மையில் வாழ்ந்த இவரது பெற்றோர் நற்பண்புகளில் செல்வந்தராய் விளங்கினார். இவர்

கள் பாரிசிலுள்ள புனித நிக்கொலாஸ் யாத்திரை ஸ்தலத்திற்குச் சென்று வேண்டுதல் செய்தார்கள். அங்கு அவரது தாயார் முன்வைத்த நேர்த்தியின் விளைவாக நிக்கொலஸ் பிறந்தார். இவர் சிறுவயதிலேயே இறைபக்தியிலும் இறைவார்த்தை கேட்பதிலும் ஆர்வத்தோடு விளங்கினார். சாந்தம் நிறைந்தவராய் எல்லோராலும் கவரப்பட்டார். இவர் ஏழைகள் சார்பாகக் கரிசனைநிறைந்த அன்பைப் பொழிந்தார். வழியில் சந்திக்கும் ஏழைகளை நேரே வீட்டிற்குக் கூட்டிவந்து தனக்கென வைத்திருந்ததையெல்லாம் வாரி வழங்குவார். கிழமையில் மூன்று நாட்கள் உபவாசமிருந்தார். நல்ல நூல்களை வாசித்தல், பக்தி முயற்சிகள், ஆன்மீக உரையாடல்கள் போன்றவற்றில் இவர் ஈடுபடுவார்.

இவ்வாறு செபதபங்களில் ஆர்வத்தோடு ஈடுபட்டு ஆலயத்தில் அதிக நேரம் செலவிட்டபொழுது ஒருநாள் ஓஸ்ரின்சபைத் துறவி ஒருவர் போதித்தது இவரது செவிகளில் எதிரொலித்தது. உலகபோக்கில் வாழ்வது வீணிலும் வீண் என்பதைப் புரிந்துகொண்டவராய், உடனடியாகவே உலகினைத் துறந்து, அத்துறவியின் சபையிலேயே இணைந்துகொண்டார். அத்துறவியின் கண்காணிப்பின்கீழ் நவசந்நியாசப் பயிற்சி பெற்று, பதினெட்டு வயது முடியும் முன்னரே முதல்வாக்குறுதியை மேற்கொண்டார். றெகானாற்றி, மசேறாற்றா போன்ற மடங்களுக்கு அனுப்பப்பட்டு, ஈற்றில், சின்கோலில் மடத்தில் ஒசிமோவின் ஆயரால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அப்போதிருந்து இவர், பீடங்களில் ஒரு சம்மனசாக, மார்பினில் தெய்வீகச்சுவாலை சுட்டெரிக்க, முகம் பிரகாசிக்கக் காட்சியளிப்பார். இவர் கண்களிலிருந்து இனியநீர் ஆறாய் பெருக்கெடுத்தோடும். இப்புனிதரின் கரங்களால் தினம்தோறும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்கெடுக்கப் பக்தர்கள் ஒன்றுகூடுவார்கள். இவரது தூய ஆன்மாவிற்கும் இறைவனுக்குமிடையே இடம்பெறும் தியானத்தில், இரகசிய உரையாடலில், குறிப்பாகத் திருப்பலிவேளைகளிலும் ஒப்பரவு அருட்சாதன வழங்கல்வேளைகளிலும் வான்வீட்டின் இன்விருந்தை முன்கூட்டியே சுவைப்பவராய் காட்சியளிப்பார். இவர் பொதுவாக, நாள்தோறும் போதித்தார். இவரது பிரசங்கங்கள் எப்பொழுதும் எண்ணில்லா மனமாற்றங்களையே தோற்றுவித்தன. பாவசங்கீர்த்தனங்களிலும் மறையுரைகளிலும் இவர் முன்வைக்கும் அறிவுரைகள் எப்பொழுதும் இதயத்

மைத் தொடுவதாய் கேட்போரின் மனங்களில் ஆழமாய் பதிந்தன.

இவர் தனது அறுபத்தோராம் வயதில், கடும் வயிற்றோட்டத்திற்குள்ளாகி, 1306ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ம் திகதி வான்வீடு சேர்ந்தார். 1446ம் ஆண்டு, திருத்தந்தை 4ம் இயுயீனியஸ் இவருக்குப் புனிதர்பட்டம் அளித்தார். இவர் அடிக்கடி திருப்பலி ஒப்புக்கொடுத்த ரொலென்ரினோவிலுள்ள சிற்றாலயத்தில் இவரது பூதவுடல் புதைக்கப் பட்டுள்ளது.

## புரட்டாதி 13 புனித இயுலோயியஸ் ( - 608)

இவர் சீரிய நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளம் வயதிலே-யே துறவறத்தைத் தழுவினார். கற்றலில் ஆர்வம் கொண்டவராய் இலக்கியத்தில், வேதாகமத்தில், திருச்சபையின் பாரம்பரியத்தில் பாண்டித்தியம் பெற்றார். அறிவிலும் ஞானத்திலும் சிறந்துவிளங்கிய இவர் தெய்வீக அறிவை எளிதில் தெரியவைப்பதில் ஆற்றல்மிக்கவராய் சமகாலத்தில் வாழ்ந்த புனித பெரிய கிரகோரியார், புனித இயுரிசியஸ் போன்ற திருச்சபையின் உயர்விளக்குகளில் ஒருவராய் சுடர்விட்டுப் பிரகாசித்தார். நேர்மை, தாழ்மை, செபம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நற்பண்புகளுக்கு இலக்கணமாக உயர்ந்து விளங்கினார். திருச்சபையில் பெரிய கலவரங்கள் நிலவிய காலகட்டத்தில் ஏகாந்தத்திலிருந்து இவர் எடுக்கப்பட்டு, அந்தியோக்கின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். புனித இயுலோயியஸ் அந்தியோக்கில் வாழ்ந்தபொழுது கொன்சான்ரிநோபிளின் பிதாப்பிதாவாகிய புனித இயுரிசியஸோடு இணைந்து உண்மைக்குப் புறம்பானவர்களை எதிர்த்துப் போராடினார்.

பேரரசன் யஸ்ரினின் காலத்திலும் அவரைத் தொடர்ந்தும் கொடுங்கோலாட்சி நீடித்தது.. தொடர்ந்து பத்து ஆண்டுகள் ஆட்சிசெய்து, 2ம் யஸ்ரின் அரசர் 576ம் ஆண்டு இறந்தார். பின்னர் நேர்மைமிக்க திபேரியஸ் கொன்ரன்ரைன் பேரரசன் ஆட்சிப்பீடமேறினார். இவர் கடந்த கால ஆட்சியாளர்களால் நாட்டிற்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட காயங்களை ஆற்றிட முற்பட்டார். இவர் தனது தேசத்தின் எல்லா மூலை

முடுக்குகளிலும் எல்லைகடந்து தானதர்மம் செய்யலானார். இவரது சொத்துக்களெல்லாம் ஏழைகளுக்குத் திறந்துவிடப்பட்டன. பலவிதமான தீமைகளினால் பாதிப்புற்றிருந்த அலெக்சான்ரிய திருச்சபைக்கு விவேகமும் வீரமுடைய தலைவர் தேவைப்பட்டார். பேரரசரின் விருப்பப்படி, புனித இயுலோயியஸ் 583ம் ஆண்டு அலெக்ஸ்ன்ரியாவின் பிதாப்பிதாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொறுப்பேற்று இரு வருடங்களின் பின்னர் எம்புனிதர் கொன்ஸ்ரிநோபிள் சென்று, அங்கு புனித பெரிய கிறகோரியாரைச் சந்தித்தார். இவர்களிடையே நல்ல நட்புறவு வளர்ந்தது. அச்செப்பலிக்கு எதிராகவும் இயுரிசிய பேதகங்களுக்கெதிராகவும் புனித இயுலோயியஸ் எழுதிய பல நூல்கள் புனித பெரிய கிறகோரியாரால் பாராட்டுப் பெற்றன. இயுலோயியஸ் 608ம் ஆண்டு இறையடிசேர்ந்தார். புனிதர்களின் வியத்தகு செயற்பாடுகளைப் பாராட்டுகின்றோம். எனினும், அவர்களது புனிதத்துவம் இவற்றிலல்ல, மாறாக, அவர்களது ஆன்மாக்களின் உண்மைக்கான தீவிரமான மனப்பாங்கையே அவை எடுத்துக்காட்டுகின்றன. அங்குமிங்குமாகச் சில நன்மைகளைச் செய்துவிட்டு ஒருவர் புனிதராவதில்லை. தொடர்ச்சியான ஆன்மீக எளிமை, தாழ்மை, தூய்மை, சாந்தம், பொறுமை, பிறரன்பு, இறையன்பு போன்ற நற்பண்புகளால் நிறைவுறும்பொழுதே, நாம் புனிதத்தை நோக்கிப் பயணிக்கமுடியும்.

## புரட்டாதி 14 திருச்சிலுவையின் மகிமைவிழா

கி.பி. 614ம் ஆண்டு, பெர்சியா நாட்டு அரசன் மூன்று பெரும் படைகளைத் திரட்டி, மெசபத்தோமியா நாட்டிற்குச் சென்று அதை வென்றான். இலட்சக்கணக்கான யூதர்களை அடிமைகளாக விற்றான். ஜெருசலேமிலிருந்த திருச்சிலுவையையும் எடுத்துக்கொண்டு தனது நாட்டிற்குச் சென்றான். கொன்ஸ்சாந்துநோபிளின் புதிய அரசனான கெராக்கியஸ் பல நாட்களாக உண்ணாநோன்பிருந்து பெர்சியநாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். அவர் அவர்களை வென்று, கி.கி. 627ல் திருச்சிலுவையை மீட்டுக்கொண்டு, திருப்பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர்வலமாய் சென்று தேவாலயத்தில் திருச்சிலுவையை நாட்டினார்.

## புரட்டாதி 15 வியாகுலமாதா திருநாள்

இயேசுவின் பாடுகளில், மரணத்தில் இணைந்து பங்கேற்றவராக புனித மரியா விளங்குகின்றார். சிமியோன் அவர்களுக்கு ஆசி கூறி, மரியாவை நோக்கி,"இதோ, இக்குழந்தை இஸ்ராயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலரது மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றார் (லூக்கா 2:34-35). இயேசுவின் பாடுகளில் பங்கேற்றதன் பயனாக மரியா இணை இரட்சகியாக திருச்சபையினால் போற்றப்படுகின்றார். இந்தத் திருவிழா முதன்முதலாக கி.பி. 1668ல் கொண்டாடப்படத்தொடங்கியது. திருத்தந்தை 7ம் பத்திநாதர் நாடுகடத்தப்பட்டதிலிருந்து மீண்டும் உரோமைக்கு கி.பி. 1814ல் வந்தடைந்தபொழுது நன்றியுணர்வுடன் திருச்சபை முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

## புரட்டாதி 16 புனித கொர்னேலியஸ் ( -253) புனித சிப்பிரியன் (200-258)

கொர்னேலியஸ் 251ல் திருத்தந்தையாக அபிசேகம் செய்யப்பட்டு, 253 ஆனி வரை ஆட்சி செய்தார். நொவேசியன் தான் திருத்தந்தையாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். எனினும். கொர்ணெலியஸ் திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார். கோபங்கொண்ட நொவேசியன் தான் எதிர்த்திருத்தந்தை என்றும் ஆயர்கள்கூட சில மோசமான பாவங்களை மன்னிக்க முடியாது என்றும் வாதாடினார். ஆயர்மன்றத்தைக் கூட்டி, நொவேசியனைத் திருச்சபையிலிருந்து திருத்தந்தை விலக்கினார். வேதகலாபனையின் நிமித்தம் திருத்தந்தை கொர்ணேலியஸ் சிவிட்டாவெக்கியாவிற்கு நாடு கடத்தப்பட்டு, கி.பி.253 ஆனியில் மறைசாட்சியானார்.

சிப்பிரியான் 200ம் ஆண்டளவில் ஆப்பிரிக்காவில் அஞ்ஞானப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். 56 வயதில் கிறிஸ்தவனாகத் திருமுழுக்குப் பெற்று, ஈராண்டுகளில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு,

ஈராண்டுகள் குருவாகப் பணியாற்றினார். பின்னர் கார்த்தாயின் ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார். இவர் திருத்தந்தை கொர்ணேலியசிற்கு ஆதரவு நல்கினார். இவர் கத்தோலிக்க திருச்சபையின் ஒன்றிப்பை வலியுறுத்தினார். "திருச்சபை உங்களுக்குத் தாய் இல்லை என்றால் கடவுள் உங்களுக்குத் தந்தையாக இருக்கமுடியாது. கடவுள் ஒருவர். கிறிஸ்து ஒருவர். திருச்சபை ஒன்று. நாங்கள் கிறிஸ்துவின் வாரிசுகளாகித் திருச்சபையில் ஒன்றித்திருக்கிறோம்" என்று சிப்பிரியான் மொழிந்தார். 258ல் பேரரசன் வலேரியனால் சிப்பிரியான் மறைசாட்சியாக்கப்பட்டு திருச்சபையில் சிறப்பிடம்பெற்றார்.

## புரட்டாதி 21 புனித மத்தேயு

இவர் கலிலேயாவின் அல்பேயுவின் மகனாகப் பிறந்தார். நான்கு நற்செய்தியாளர்களில் ஒருவராக மத்தேயு விளங்குகின்றார். இவர் ஏரோது அந்திப்பாஸ் காலத்தில் எபிரேய மக்களிடமிருந்து வரி வசூலிப்பவராகச் செயற்பட்டார். அபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகள் கற்றவர். இயேசு அங்கிருந்து சென்றபொழுது மத்தேயு என்பவர் சுங்கச் சாவடியில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரிடம் "என்னைப் பின்பற்றி வா" என்றார் அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். (மத்தேயு 9: 9).

## புரட்டாதி 23 புனித பியோ (1887-1968)

இவர் இத்தாலியில், 1887 வைகாசி 25ம் திகதி கிரேசியொ போர்கியோன், மரியா குயிசெப்பா தே நுண்சியோ தம்பதியினருக்கு 8வது குழந்தையாக, விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவரது திரு முழுக்குப் பெயர் பிரான்சிஸ்கோ. சிறு வயதிலேயே பக்தியில் சிறந்து விளங்கினார். இவர் பள்ளிப்படிப்பு முடிந்ததும் குடும்ப வறுமையின் காரணமாகத் தனது சகோதரனோடு வேலைக்குச் செல்ல விரும்பினார். ஆனால் இவரது தந்தை, "மகனே, உன்னை நான் வேலைக்கு அனுப்ப

மாட்டேன். நீ ஒரு குருவாக வரவேண்டும்" என்றார். "அப்பா அதற்கு நிறையப் பணம் வேண்டுமே" என்று பதிலளித்தான் மகன். "உனது படிப்பிற்குத் தேவையானபணத்தைச் சம்பாதிக்க நான் அமெரிக்காவிற்குப் போகின்றேன்" என்று கூறியவாறு தந்தை செயற்பட்டு, மகனைக் குருவாக்கினார்.

பிரான்சிஸ்கோ 1903ல் மார்கோனேயில் உள்ள கப்புச்சின் ஆச்சிரமத்தில் துறவறத்தைத் தொடங்கினார். துறவற ஆடையை அணிந்து கொண்ட அன்று, பியோ என்ற நாமத்தைச் சூட்டிக்கொண்டார். குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இளமையில் இவர் காசநோயால் அல்லல் பட்டார். 1918 புரட்டாதி 20ம் திகதி, புனித பியோ திருச்சிலுவையின் முன்னால் முழந்தாட்படியிட்டு மன்றாடிக் கொண்டிருந்தபொழுது, இயேசுவின் ஐந்து திருக்காயங்களை முதன்முதல்பெற்ற குருவாகத் திருச்சபையில் பிரசித்தி பெற்று விளங்குகின்றார். 1999ல் இவர் அருளாளர் பட்டம் பெற்று, 2002ல் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். 2008ல் இவரது உடல் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு, காட்சி வணக்கத்திற்கு வைக்கப்பட்டது.

## புரட்டாதி 28 புனித வென்சஸ்லாஸ்

இவர் பொகீமியா நாட்டு இளவரசனாவார். இவர் தனது பாட்டி லுட்மில்லா என்பவரால் அக்கறையோடு வளர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே இவரிடம் புனிதம் மேலோங்கிக் காணப்பட்டது. திருச்சபையின் வளர்ச்சிக்காக அயராதுழைத்தார். திவ்விய நற்கருணைமீது ஆழ்ந்த பக்தி கொண்டவராய் இரவுநேரத்தில் ஆலயம் சென்று திருவிழிப்பில் ஈடுபடுவார். வைகறையில் திருப்பலியில் பங்கெடுக்க ஆலயம் செல்லும் வழியில் தம்பி பொலிஸ்லாஸ் வழிமறித்து, கத்தியால் குத்திக் கொன்றான். 'தம்பி, இறைவன் உன்னை மன்னிப்பார்' என்று சொல்லி மறைசாட்சி முடியைப் பெற்றுக்கொண்டார். பெகிமீயாவின் பாதுகாவலராக புனித வென்சஸ்லாஸ் விளங்குகிறார்.

## புரட்டாதி 29 புனித மிக்கேல், பனித கபிரியேல், புனித் றப்பியேல்

மிக்கேல் என்றால் இறைவனுக்கு நிகர் யார்? என்று பொருள்படும். இவர் மோட்சத்தில் பசாசுகளை எதிர்த்துப் போராடி வெற்றிகண்டவர். கபிரியேல் என்றால் இறைவனின் பலம் என்று பொருள்படும். கடவுளின் வல்லமையையும் மகிமையையும் வெளிக்காட்டும் ஒவ்வொரு வேளை யிலும் கபிரியேல் தூதனாக அனுப்பப்படுகிறார். இயேசுவின் தாயாகப் போகிறார் என்ற நற்செய்தியை மரியாவிற்குக் கபிரியேல் அறிவித்தார். றப்பியேல் என்றால் இறைவன் குணமாக்கினார் என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டில் பெரிய தொபியாஸ் பார்வையிழந்தபொழுது இவர் புதுமையாகக் குணமாக்கினார் என்றும் அவரது மகனின் நீண்ட பயணத்தில் வழித்துணையாகச் சென்றார் என்றும் கூறப்படுகிறது. நோயாளிகளுக்கும் பயணிகளுக்கும் பாதுகாவலராக தூதர் றப்பியேல் விளங்குகிறார்.

## புரட்டாதி 30 புனித ஜெறோம் 342-420)

இவர் 342ல் யுகொசெலெவியாவில் பிறந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்த இவர் 9 வயதில் கல்விக்காக உரோமை அனுப்பப்பட் டார். சிலகாலம் வழக்கறிஞராக உரோமையில் பணியாற்றினார். மறை நூலில் கொண்ட ஆர்வத்தினால் இவர் தவறான வழிகளிலிருந்து காப் பாற்றப்பட்டார். இவர் திருத்தந்தை லிபேரிஸால் 360ல் திருமுழுக்குப் பெற்றார். திருவிவிலிய வாசிப்பின் முன்னும் பின்னும் செபம் இடம்பெற வேண்டும் என்று புனித ஜெறோம் வலியுறுத்தினார். “திருவிவிலியத்தை அறி யாதவர் இயேசுவையே அறியாதவர்” என்று புனித ஜெறோம் திருவி விலியத்தின் மேன்மையைச் சிறப்பித்துக் கூறினார். இவர் ஈற்றில், பெத்ல கேமில் குடியேறி முழு விவிலியத்தையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். இவர் திருச்சபைத் தந்தையருள் கல்வியறிவில் முதன்மையானவராகக் கருதப்படுகின்றார்.

**டேவிற் வி. பற்றிக், அ.ம.தி.,**

வசந்தகம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.